# இயேசு யார்?

பாடம் - 10

# இயேசுக்கிறிஸ்துவின் இரண்டாவது வருகை

நமது கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசுக்கிறிஸ்து இதோ சீக்கிரமாய் வருகிறேன்: அவனவனுடைய கிரியைகளின்படி அவனவனுக்கு நான் அளிக்கும் பலன் என்னோடேகூட வருகிறது என்று திருவுளம்பற்றுகிறார் (வெளி 22:12 ).

தீர்க்கத்தரிசிகளால் முன்னுரைக்கப்பட்டதும், இயேசுதாமே திட்ட திட்வட்டமாய் பலமுறை உரைத்ததும், உலகமனைத்தும் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் நம்பினாலும் நம்பாவிட்டாலும் எதிர்கொள்ளவேண்டியதுமான மிகமிக முக்கியமான நிகழ்ச்சி என்னவெனில், இயேசு சீக்கிரமாய் பூமிக்கு வரப்போகிறார் என்ற சத்தியமே. கிறிஸ்துவத்தின் தலையாய சத்தியமும், கிறிஸ்தவனின் அசைக்க முடியாத நம்பிக்கையும், சகல சத்தியத்திலும் பிரதானமான சத்தியமும் இயேசு மீண்டும் பூமிக்கு வரப்போகிறார் என்பதுதான்.

**வருகையின் நோக்கம்**.-

1)உயிருள்ளோரையும், மரித்தவர்களையும் நியாயம் தீர்க்க இயேசு வருகிறார்.

2)தமக்காகக் காத்துக்கொண்டிருக்கும் பரிசுத்த சபையினைத் தன்னோடு நடுவானில் சேர்த்துக்கொள்ள இயேசு வருகிறார்.

3) தமது ஆயிரமாயிரமான பரிசுத்தவான்களோடு இப்பூமியில் ஆயிரம் வருடம் அரசாட்சி செய்ய இயேசு வருகிறார்.

4)சத்துருவாகிய சாத்தானுக்கு நியமிக்கப்பட்ட நித்திய நியாயத்தீர்ப்பைச் செலுத்த இயேசு வருகிறார் (யூதா 1:15)

**வருகையின் நிச்சயம்** :- இயேசுக் கிறிஸ்துவின் ஒவ்வொரு வார்த்தையும் சத்தியமானது. ஒரு வார்த்தை கூட அவர் வீணாகப் பேசியதில்லை. வானமும் பூமியும் ஒழிந்துபோனாலும் அவருடைய வார்த்தைகளோ ஒழிந்துபோவதில்லை. இயேசு தாம் மகிமைபொருந்தினவராய், ஆயிரமாயிரம் பரிசுத்த தூதர்களுடன் வரப்போவதைத் திட்டமும் தெளிவுமாக எடுத்துரைத்துள்ளார். அவர் உயிர்த்தெழுந்து, பரலோகம் சென்றபோது வானிலிருந்து தோன்றிய இரண்டு தூதர்கள் அவருடைய சீசர்களிடம் இதனை உறுதிப்படுத்தினர்.(அப் 1:10.11). அவர்களுடைய சீஷர்களும் அவர்களுக்குப்பின்வந்த பரிசுத்தவான்களும் தங்களுக்கு வழங்கப்பட்ட தரிசனங்களாலும், தீர்க்கத்தரிசன உரைகளாலும் அதனை உறுதி செய்தனர். எல்லாவற்றையும்விட இயேசு முன்னுரைத்த அவருடைய வருகைக்கான அடையாளங்கள் அவர் சொன்னபடியே இவ்வுலகில் நடைபெற ஆரம்பித்துள்ளன.

**வருகையின் காலம்** :- இயேசு வருகிற நாளை பரலோகத்திலிருக்கிற பிதா ஒருவர் தவிர வேறொருவரும் அறியார்கள் என்பதைத் தெளிவாகக் கூறிவிட்டார்(மத் 24:36). எனவே ஒரு குறிப்பிட்ட நாளில் இயேசு வருவதாக எவரேனும் சொன்னால் அது ஒரு ஏமாற்று. இதுவரை உலகில் பலமுறை அதுபோல் ஏமாற்றுக்கள் நடந்தும் உள்ளது. இயேசு வரும் அந்த நாளை ஒருவனும் அறியாவிட்டாலும், அந்த நாள் வருகிற காலத்தை இயேசு அடையாளங்களுடன் எடுத்துரைத்துள்ளார். அந்த அடையாளங்களின்படி பார்த்தால் இப்போது வாழ்ந்துகொண்டிருக்கும் சந்ததிதான் இயேசுவின் வருகையின்போது இருக்கப்போகிற சந்ததி என்று வேத ஆராய்ச்சியாளர்கள் கருதுகிறார்கள். அதாவது இன்னும் 25 ஆண்டுகளுக்குள் இயேசுவின் வருகை இருக்கலாம் என்பது கணிப்பு. அதற்குக் குறைவான காலத்திலும் இருக்கலாம். ஏனெனில் அவர் சொன்ன அடையாளங்களில் பெரும்பான்மையானவை நடந்துவிட்டது.

**இயேசுவின் வருகை தாமதிப்பதுபோல் தோன்றக் காரணம் :-** பல ஆண்டுகளுக்கு முன்னிருந்தே இயேசு வருகிறார் என்று கிறிஸ்தவர்கள் சொல்லிவந்தாலும் இன்னமும் அவர் வரக்காணோமே என்று பலர் கேட்கிறார்கள். அவர்களுக்கு பரிசுத்த வேத வசனமே பதிலளிக்கிறது.

தாமதிக்கிறார் என்று சிலர் எண்ணுகிறபடி, கர்த்தர் தமது வாக்குத்தத்தத்தைக்குறித்துத் தாமதமாயிராமல், ஒருவரும் கெட்டுப்போகாமல் எல்லாரும் மனந்திரும்ப வேண்டுமென்று விரும்பி, நம்மேல் நீடிய பொறுமை உள்ளவராயிருக்கிறார் (2 பேதுரு 3:9).

ஆம், மனிதர்களில் அநேகர் மனந்திரும்பி, நித்திய நரகத்திற்குத் தப்பிக்கொள்ளும்படிக்கே இயேசு தாமதிப்பதுபோல் இருந்து தமது பொறுமையை விளங்கப்பண்ணுகிறார்.

வெகுதூரத்தில் ரயில் வருகிறது. அநேக மனிதர்கள் ரயில்கேட்டைத் தாண்டி நடந்துகொண்டிருக்கிறார்கள். கேட் காவலாளி ஐயா, வண்டி வருகிறது என்பான். வண்டி நிச்சயமாக வரும் என்பதும், தண்டவாளத்தின்மேல்தான் வரும் என்பதும் அனைவரும் அறிந்ததே. ஆனால் அது எந்த விநாடி கேட்டைக் கடந்துசெல்லும் என்று கூறமுடியாது. வண்டி இன்னும் அருகில் வந்ததும் காவலாளி நில்லுங்கள், வண்டி வருகிறது என்று பலமாக எச்சரிப்பான். வெகு அருகில் வந்தும் தண்டவாளத்தைத் தாண்டிச் செல்பவர்களைப்பார்த்து ஐயோ, வண்டி வண்டி என்று அலறுவான். வண்டி தூரத்தில் வரும்போதே காவலாளியின் எச்சரிக்கையைக்கேட்டு தண்டவாளத்தை விட்டு விலகி இருப்பவர்கள் புத்திசாலிகள். வரட்டும் பார்க்கலாம் என்றோ, காவலாளியைப் பார்த்து ரயில் எத்தனையாவது வினாடி வண்டி வரும் என்று நீ சொல்லவில்லையே, முதலிருந்தே சொல்லிக்கொண்டிருக்கிறாயே வண்டி இன்னும் வரக்காணோமே என்றும் சொல்லிக்கொண்டு பாதையைக் கடப்பவர்கள் அதன் பலனை அடைவார்கள்.

அதேபோலத்தான் இயேசுவின் வருகையும் சர்வ நிச்சயமானது. இயேசுவின் வருகை நெருங்க நெருங்க, விசுவாசிகள் அதிகமதிகமாய் எச்சரித்து வருகிறார்கள். அதைக்கேட்டும் உதாசீனம் செய்பவர்கள் அந்நாளில் நித்திய நரகில் சேர்வார்கள். அதற்கு முன்பே இயேசுவைச் சந்திக்க தன்னை ஆயத்தம் செய்துகொள்பவர்கள் புத்திமான்கள்.

<u>நிறைவேறி வரும் வருகையின் அடையாளங்கள் :-</u> ரயில் வருமுன் அதன் சத்தமும். எச்சரிக்கை மணியும், காவலாளியின் விசில் சத்தமும் கேட்கும். கண் தெரியாதவனும் அதைக்கேட்டு தண்டவாளத்தைக் கடக்காமல் எச்சரிக்கை அடைந்து நிற்கலாம். அதேபோல இயேசுவின் வருகைக்கான அடையாளங்களையும் இயேசு தெளிவாக உரைத்துள்ளார். சரித்திரத்தைக் கூர்ந்து நோக்குகிறவர்கள் இயேசுசொன்ன அடையாளங்கள் முற்றிலும் பிசகாமல் நடந்துவருவதை உணர்ந்துகொள்ளலாம். அதைக்கொண்டாவது எச்சரிக்கப்பட்டு இயேசுவை ஏற்றுக்கொள்ளலாம். நிறைவேறிவரும் அந்த அடையாளங்களாவன:

1)இஸ்ரேல் என்னும் ராஜீயம் ஸ்தாபிக்கப்பட்டு, தன்னுடைய தலைநகரையும், முழு நிலப்பகுதியையும் பெற முயற்சித்துக்கொண்டிருக்கிறது. அடுத்து வரப்போகிற போரில் அது வெற்றிபெறும்.

2)பல இடங்களில் மிகப்பெரிய பூமி அதிர்ச்சிகளும், உள்நாட்டு யுத்தங்களும் ஏற்பட்டு பொதுமக்கள் பீதியுடன் சமாதானமின்றி இருக்கிறார்கள். மூன்றாம் உலக யுத்தத்திற்கு நாடுகள் தங்களைத் தயார் செய்துகொண்டு வருகின்றன.

3)விபச்சாரமும் அதுதொடர்பான எய்ட்ஸ் போன்ற உயிர்க்கொல்லி நோய்களும் பெருகியுள்ளது. கண்டுபிடிக்கப்பட முடியாத கொள்ளைநோய்கள் தோன்றி மக்களில் ஒருசாரார் அரிகின்றனர்.

4)பல இடங்களில் பஞ்சங்கள் தோன்றி, உலக நிறுவனநகளால் அதனைத் தீர்க்க இயலவில்லை. இவைகளெல்லாம் நிறைவேறி வந்தாலும், உலகம் முழுவதையும் ஆட்சிசெய்ய முயலும் ஒரு அரசும். அதன் தலைவனும் இன்னும் வெளிப்படவில்லை. அவன் ஒரு நாத்திகனாகவும், பொய்யான சமாதானத்தைக் கொண்டுவருபவனாகவும் வெளிப்படுவான். அவன் வெளிப்பட்டு ஏழரை ஆண்டுகளில் கிறிஸ்துவின் வருகை இருக்கும்.

<u>வருகையின் நிகழ்ச்சி :-</u> இயேசு சொன்ன அடையாளங்கள் யாவும் பூர்த்தியாகும்போது அவருடைய வருகை இருக்கும். அதாவது உலகமனைத்தையும் ஆளுகைசெய்ய முற்படும் அக்கிரமக்காரன் தோன்றி ஏழரை வருடங்கள் முடியுமுன், சூரியனிலும் சந்திரனிலும் வானத்திலும் பயங்கரமான அடையாளங்கள் தோன்றும். எந்த நேரத்திலும் வானத்திலுள்ள கோள்களிலிருந்து விண் கற்கள் பூமியின்மீது விழும். அதனால் பெரும் சேதமும், பூமியின் சுழற்சியில் மாற்றமும் ஏற்படும். அடுத்து என்ன நேரிடுமோ என்ற எதிர்பார்ப்பில் மனிதர்களுடைய இருதயம் விரக்தியினால் சோர்ந்துபோய்விடும். அப்போது இயேசு மிகுந்த மகிமைபொருந்தினவராய் வானத்தின் மேகங்களுக்கு மேலாக உலகமெங்கும் ஒரே நொடியில் தோன்றுவார்(மத் 24.30 ). ஆயிரமாயிரம் பலத்த தூதர்களுடனும் பிரதான தூதனுடைய சத்தத்துடனும், மிகுந்த ஆரவாரமாய் தோன்றுவார்(2 பேது 3.10 - 1தெச 4.16). பூமியில் அப்போது வாழ்ந்துகொண்டிருக்கும் மக்கள் **இவரை நாம் ஏற்றுக்கொள்ளாமல் போனோமே** என்று புலம்புவார்கள்.

அவர் வந்து இறங்கும் சீயோன் மலையைத் தவிர மற்ற மலைகள் அனைத்தும் பலத்த பூமியதிர்ச்சியினால் தாழ்த்தப்படும். ஒலிவ மலையும் இரண்டாகப் பிளந்துவிடும். அந்த நாள் நியாயத்தீர்ப்புநாள் எனப்படும். அப்போது வாழ்ந்துகொண்டிருக்கும் சந்ததியிலுள்ள தீயவர்கள்

அனைவரையும் தேவதூதர்கள் பிரித்தெடுத்து, நரக அக்கினியில் போடுவார்கள். எஞ்சியிருக்கும் மக்களை இயேசுவும் அவருடன் உயிர்த்தெழுந்துவரும் அதுவரை மரித்துள்ள பரிசுத்தவான்களின் கூட்டமும் ஆயிரம் வருடம் இப்பூமியில் ஆளுவார்கள். அப்போது சாத்தான் எனப்படும் பிசாசு நரகத்தில் கட்டப்பட்டிருக்கும். அதன்பின் நரகத்திலிருக்கும் அனைவரும் உயிருடன் கொண்டுவரப்பட்டு, தேவனுடைய வெள்ளை சிங்காசனத்தின் முன்னின்று, தங்கள் செயல்களுக்குரிய பலன்களைப் பெற்றுக்கொள்வார்கள். பரிசுத்தவான்கள் தேவனுடைய ராஜ்யத்தில் சூரியனைப்போல பிரகாசிப்பார்கள். தேவன் புதிய வானத்தையும். புதிய பூமியையும் தோற்றுவிப்பார்.

## நாம் என்ன செய்ய வேண்டும்?

ஒரு பெரிய தொரிற்சாலை முதலாளி கணக்குகளைச் சரிபார்க்க வருகிறார் என்ற செய்தி கேட்டதும் அதன் ஊரியர்கள் அனைவருமே பரபரப்பாகக் கணக்குகளைச் சரிசெய்து வைப்பார்கள். அதுபோல நாமும் நமது பாவபுண்ணியங்களின் கணக்கிற்குப் பலனளிக்க இயேசு வருவதால், வாழும் நாளிலேயே அதைத் தயார்செய்து முடிக்க வேண்டும்.

பாவத்தின் பலனை தெய்வ வரிபாடுகளினாலோ, புண்ணியம் செய்வதன் மூலமாகவோ சரிக்கட்ட முடியாது. பாவத்திற்குப் பரிகாரம் பாவமன்னிப்பு ஒன்றே. அதைத்தர வல்லவர் சர்வலோக நீதிபதியான இயேசு ஒருவரே.

தன்னை வழிபடுபவர்களுக்குப் பாவமன்னிப்பைத் தருவதாக இயேசு கூறவில்லை. இயேசுவே வழியென்று நம்பி, தன் பாவங்களை உணர்ந்து மனம்வருந்தி, இயேசுவிடம் அறிக்கையிட்டு, பாங்களை விட்டுவிட்டு, பாவமில்லாத வாழ்க்கையினை அவருடைய கிருபையால் துவங்குகிறவர்களுக்கு மட்டுமே பாவமன்னிப்பு உண்டு. அக்கிரமத்தையும். பாவங்களையும் விட்டுவிடாமல், இயேசுவை பலமுறை வணங்கி காணிக்கை கொடுத்து, அவருக்கு பூஜைகள் செய்வதினால் எவ்வித பயனுமில்லை என்பதைத் திட்ட வட்டமாக இயேசு எடுத்துரைத்துள்ளார். நமது மரணமோ, கிறிஸ்துவின் வருகையோ எது முதலில் நேரிடினும், நாம் அவரை நியாயத்தீர்ப்பு நாளில் சந்திப்போம். எதிர்பாராமல் நடக்கப்போகும் இவ்விரு நாட்களுக்குமுன் நாம் மனந்திரும்பி இயேசுவைப்பற்றிக்கொண்ட புதிய வாழ்க்கை வாழத்துவங்குவோம்.

நாம் ஏற்கனவே அவரை ஏற்றுக்கொண்டவர்களானால், அவருக்கு முன்பாக நிற்க பாத்திரவான்களாக எண்ணப்படுவதற்கு, எப்பொழுதும் ஜெபம்பண்ணி விழித்திருப்போம் (லூாக் 21:36). நாம் மீட்கப்படுவது நிச்சயமாதலால் வானில் வருகிற நமது ரட்சகரைக்காண வானத்தைநோக்கி ஆவலுடன் பார்ப்போம்(லூாக் 21:28)

**கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே! இந்தப் பாடங்களின் துவக்கமுதல் முடிவுவரை திரும்பத்திரும்ப மனந்திரும்புதலும் பாவமன்னிப்பும்தான் சத்திய வேதத்தின் சாராம்சமாக வலியுறுத்தப்பட்டுள்ளது.**

**அதனைப் பெற்றுக்கொள்ளாமல் இந்தப் பாடங்களை வாசித்து முடித்து எந்தப் பயனும் இல்லை.**

**கடைசியாக இது உங்களுக்கு வழங்கப்படும் வாய்ப்பு என்பதை உணர்ந்து இன்றே உங்கள் வாழ்க்கையினை இயேசுவுக்கு ஒப்புக்கொடுத்து, நித்திய நரகத்துக்குத் தப்பிக்கொள்ளுங்கள்.**

**இன்னும் இதில் சந்தேகம் இருந்தால் மூன்றாவது பாடமாகிய இரட்சிப்பின் வழி என்பதை மீண்டும் படித்து, அதில் உள்ளபடி பயபக்தியுடன் முயற்சி செய்யுங்கள்.**

**கர்த்தர் தமது அநாதி கிருபைகளை உங்களுக்கு வழங்கி, நீங்கள் பரலோக பாக்கியத்தைப்பெற வழிநடத்துவாராக.**

**இதோ வாசற்படியில் நின்று(இருதயத்தின் வாசல்படி) தட்டுகிறேன். ஒருவன் என் சத்தத்தைக்கேட்டு கதவைத்திறந்தால் நான் அவனுக்குள் பிரவேசிப்பேன் என்று இயேசு அழைக்கிறார். தட்டும் அவரைத் தள்ளாமல் ஏற்றுக்கொள்ளுங்கள்.**

இவை யாவும் சத்தியம். இதை விசுவாசிப்பவர்கள், நம்பாதவர்கள், யாவராலும் தடுக்கமுடியாத இயேசுவின் வருகையையும், நியாயத்தீர்ப்பையும் நீங்கள் ஏன் உதாசீனம் செய்யவேண்டும்? உயிரோடு இருக்கும்போதே இயேசுவோடு ஆனந்த பாக்கியமடையவும், நித்திய நரகத்திற்குத் தப்பிக்கொள்ளவும், மனந்திரும்புகிறவர்களுக்கு இலவசமாய் பாவமன்னிப்பைத்தரும் இயேசுவைப் பற்றிக்கொள்ளுங்கள். அவரே வழியும், சத்தியமும், ஜீவனுமாயிருக்கிறார்.

**இறுதியாக**

இந்தப் பாடங்ளை நீங்கள் கற்றுக்கொள்ள கிருபைசெய்த தேவனுக்கு ஸ்தோத்திரமுண்டாவதாக! தேவனுடைய கிருபையில்லாமல் இவற்றை நீங்கள் கற்றுக்கொண்டிருக்க முடியாது. அநேகருக்குக் கிடைக்காத இந்தபாக்கியத்தைப்பெற்ற நீங்கள், இவற்றை மீண்டும் ஒருமுறை சிந்தித்து, தெளிவான ஒரு புதிய வாழ்க்கையினைத் துவக்குங்கள். உங்களை ஊக்கப்படுத்தவும், வழிநடத்தவும் எங்கள் உதவி தேவைப்பட்டால் எங்களுக்கு எழுதுங்கள். உங்கள் சந்தேகங்களுக்குப் பரிசுத்த ஆவியானவரைக் கொண்டு நாங்கள் பதிலளிக்கிறோம். எங்கள் உடன்விசுவாசிகளில் ஒருவர் உங்களை நேரில் சந்தித்து உங்கள் சந்தேகங்களைப் போக்க விரும்பினாலும் எங்களுக்கு எழுதுங்கள். தேவன் தமது கிருபையின்படியே இயேசுக்கிறிஸ்துவுக்குள் உங்களை ஆசீர்வதிப்பாராக!

இருந்தவரும் இருக்கிறவரும் வருகிறவருமான சர்வவல்லமையுள்ள தேவனுடைய குமாரனாகிய இயேசு இதோ, சீக்கிரமாய் வருகிறேன், அவனவனுடைய கிரியைகளின்படி அவனவனுக்கு நான் அளிக்கும் பலன் என்னோடேகூட வருகிறது என்று திருவுளம்பற்றுகிறார்.

**கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளியுங்கள்.**

1) **இயேசுகிறிஸ்துவின் வருகையின் நோக்கமென்ன?**

2) **மேகங்களுக்கு மேலாக இயேசு வருவதைக்கண்டு பூமியில் வசிப்பவர்கள் அழுது புலம்புவார்கள். ஏன்?**

3) **இயேசுவின் வருகைக்கான அடையாளங்களில் தற்போது நிறைவேறிவிட்ட ஒன்றைக் கூறுங்கள்.**

4) **இந்த இயேசுவைச் சர்வலோக நீதிபதியாகச் சந்திக்க நீங்கள் ஆயத்தமாயிருக்கிறீர்களா?**

அன்பார்ந்தவர்களே!

மேல்காணும் கேள்விகளுக்கான பதில்களை கீழ்காணும் அஞ்சல் அல்லது மின்னஞ்சலின் ஊடாக பதில் அளிக்கலாம் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

அஞ்சல் முகவரி: **J.K.JESUDOSS CHELLADURAI**
**604 Third Building,**
**Shanthi Park Appartments**
**Jayanagar 9 th Block**
**Bangalore -69**
**India**
மின்னஞ்சல் முகவரி: **jkjesudoss@yahoo.com**

## பாடங்கள்:

- இயேசு யார்
- இயேசுவின் தெய்வீகம்
- இரட்சிப்பின் வழி
- ஜெபமும் வேதவாசிப்பும்
- சாத்தானும் மனிதனும்
- மோட்சமும் நரகமும்
- ஞானஸ்நானமும், பரிசுத்த ஆவியானவரும்
- சுவிசேஷமும், விசுவாசியும்
- திருச்சபையும், சபைப்பிரிவுகளும்
- இயேசுகிறிஸ்துவின் இரண்டாவது வருகை

� copyright 1999-2017 TAMILCHRISTIAN.COM All rights

reserved.